

தி.மு.க. சார்பில் திருச்சுழி சட்டமன்றத் தொகுதி வேட்பாளராக தங்கம் தென்னரசு அறிவித்ததையடுத்து காரியாபட்டியில் தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சியினர் அவரை வரவேற்றனர்.



மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் கோவில்பட்டி சட்டமன்றத் தொகுதியின் வெற்றி வேட்பாளராக அறிவிக்கப்பட்ட கா. கருணாநிதியை ஆதரித்து அமைச்சர் பெ. கீதா ஜீவன் நேற்று கோவில்பட்டி பகுதியில் வெற்றி சின்னமாம் உதயசூரியன் சின்னத்தில் பொதுமக்கள் தங்களது பொன்னான வாக்குகளை அளிக்குமாறு பிரச்சாரம் செய்தார், உடன் ஒன்றிய செயலாளர்கள் முருகேசன், ராதா கிருஷ்ணன், பொதுக் குழு உறுப்பினர் இரா. ரமேஷ் மற்றும் கழக நிர்வாகிகள், மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### முதல்வரின் தேர்தல் சுற்றுப் பயணம் – அம்பாசமுத்திரம் – ஆலங்குளம் தொகுதி தேர்தல் பணிகள் குறித்து

# நெல்லை மேற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் அறிவிப்பு!

நெல்லை, மார்ச் 31 -

நெல்லை மேற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் இன்று (31. 03.2026 -செவ்வாய்க் கிழமை) மாலை 4 மணிக்கு மாவட்டக் கழக அலுவலகம் முத்தமிழறிஞர் கலைஞர் அரங்கில் (எனது தலைமையில்) நடைபெறுகிறது என நெல்லை மேற்கு மாவட்டப் பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



அதில் அவர் தெரிவித்திருப்பதாவது:

முதலமைச்சர், கழக தலைவர் அன்பு தளபதியார் அவர்களின் ஆணைப்படி, நெல்லை மேற்கு மாவட்ட செயற்குழுக் கூட்டம் இன்று (31.03.2026 ) மாலை 4 மணி அளவில், மாவட்டக் கழக அலுவலகம் முத்தமிழறிஞர் கலைஞர் அரங்கில் எனது தலைமையில் நடைபெற உள்ளது .

இந்த செயற்குழுக் கூட்டத்தில் தொகுதி பார்வையாளர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநில அணி, நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர், செயலாளர்கள், மாவட்ட அணி அமைப்பாளர்கள் தவறாமல் பங்கேற்க கேட்டுக்கொள்கிறேன்

பொருள் :

1.கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் தேர்தல் சுற்றுப் பயணம்,

2.2026 அம்பாசமுத்திரம், ஆலங்குளம் சட்டமன்றத் தொகுதிகளின் தேர்தல் பணிகள்.

3.கழக வளர்ச்சிப் பணிகள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.




மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில் வெற்றி வேட்பாளராக அனிதா ஆர்.ராதா கிருஷ்ணன் அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து திருச்செந்தூரில் உள்ள சிவந்தி ஆதித்தனார் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் ஒன்றிய செயலாளர் ஏ.பி.ரமேஷ், நகர செயலாளர் வாள் சுடலை, மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் எஸ் ஆர் எஸ் உமரிசங்கர், விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ஜனகர், வழக்கறிஞர் அணி கிருபாகரன், வி பி செல்வகுமார், மற்றும் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



இராமநாதபுரம் சட்டமன்ற வேட்பாளரும் மாவட்டக் கழகச் செயலாளருமான காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் இராமநாதபுரம் வருகையை முன்னிட்டு மாவட்ட எல்லையான பார்த்திபனூர் சோதனை நிறுத்தம் அருகில் மாவட்ட கழகம் சார்பில் மிகச் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது வரவேற்பு நிகழ்ச்சியில் பரம்பக்குடி சட்டமன்ற வேட்பாளர் கே. கதிரவன் கலந்து கொண்டார். நிகழ்ச்சியில் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த அனைத்து ஒன்றிய கழகச் செயலாளர்கள் மாவட்டக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர் மேலும் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட தொண்டர்கள் கலந்து கொண்டு சிறப்பாக வரவேற்றனர்



தி.மு.க. சார்பில் அருப்புக்கோட்டை சட்டமன்றத் தொகுதி வேட்பாளராக கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் அவர்களை அறிவித்ததையடுத்து அருப்புக்கோட்டையில் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்தார். தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சிகள் அவரை வரவேற்றனர்.




கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மற்றும் கூட்டணிக் கட்சி தலைவர்களின் ஆதரவுடன் அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் திருச்செந்தூர் சட்டமன்ற தொகுதியில் போட்டியிட கூட்டணி கட்சி நிர்வாகிகளுடன் சென்று வேட்பு மனு தாக்கல் செய்தார். உடன் கூட்டணி கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### சிவகங்கை மாவட்டத்தில் உள்ள 4 தொகுதிகளிலும் வெற்றி பெற பாடுபடுவோம்!

# கழகம் ஏழாவது முறை ஆட்சி அமைப்பது உறுதி!

## அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் பேட்டி!

சிவகங்கை, மார்ச் 31 -

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் அமைச்சரும் சட்டமன்ற தொகுதி வேட்பாளருமான கே ஆர். பெரிய கருப்பன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:- கழகத்தின் சார்பில் கழக தலைவர் அவர்களால் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் ஐந்தாவது முறையாக திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதியில் வேட்பாளராக போட்டியிடுகிறேன். நான்கு முறை போட்டியிட்ட எனக்கு தொகுதி மக்கள் கூட்டணி கட்சியினர் பெருவாரியான ஆதரவு தந்து வெற்றி பெறச் செய்தார்கள் .



அதேபோல் இம்முறையும் அதிக அளவில் ஆதரவு தந்து வாக்களிப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோர் தலைமையில் அமைந்த ஐந்து முறை ஆட்சியில் தமிழகத்திற்கு பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தி தமிழகத்தை வளப்படுத்தினார்கள்.

அதே வழியில் 2021 வது ஆண்டில் ஆட்சிக்கு வந்த கழக தலைவர் தளபதி அவர்கள் திராவிட மாடல் கதாநாயகர் முதல்வர் தளபதி அவர்கள் பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை அறிவித்து அதை செயல்படுத்தினார் . 2021தேர்தல் வாக்குறுதிகளில் சொல்லாததையும் சொல்லியதையும் நிறைவேற்றித் தந்தார்கள் .இந்த மக்கள் நலத் திட்டங்களால் தமிழகத்தில் உள்ள அனைத்து குடும்பத்து மக்களும் பயன் பெற்றுள்ளார்கள் .எனவே மக்கள் வாக்களிக்க தயாராகி விட்டார்கள். .திராவிட மாடல் 2.0 ஆட்சியில் ஏழாவது முறையாக கழகம் ஆட்சி அமைப்பது உறுதி ஆகிவிட்டது.

கழகத் தலைவர் தலைவர் அவர்கள் தளபதி அவர்கள் இரண்டாவது முறையாக முதல்வராக ஆட்சியில் அமர உள்ளார். செல்லும் இடங்களில் எல்லாம் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக்கு நல்ல வரவேற்பு உள்ளது . கூட்டணி கட்சியினர் உற்சாகத்துடன் தேர்தல் பணியினை ஆற்ற தொடங்கி விட்டார்கள். எனவே மீண்டும் கழகத் தலைவர் அவர்கள் முதல்வர் தளபதி அவர்கள் தலைமயில் ஆட்சிஅமைவது உறுதியாகிவிட்டது. மாவட்டத்தில் உள்ள நான்கு சட்டமன்ற தொகுதியிலும் கூட்டணி வேட்பாளர்களை வெற்றி பெற வைத்து தலைவர் தளபதி அவர்களிடம் சமர்ப்பிப்போம் .2021தேர்தலில் நமது தேர்தல் அறிக்கை தமிழகத்தில் கதாநாயகனாக திகழ்ந்தது. 2026சட்டமன்ற தேர்தலில் கழகத் தலைவர் வெளியிட்ட தேர்தல் அறிக்கை இம்முறை கதாநாயகன் கதாநாயகி ஆகி உள்ளது.

இவ்வாறு அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் செய்தியாளர்களிடம் கூறினார் .

பேட்டியின் போது முன்னாள் அமைச்சர் மு. தென்னவன், திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ .மாவட்ட துணைச் செயலாளர் த.சேங்கை மாறன் மற்றும் நிர்வாகிகள் உடன் இருந்தார்கள்.



தூத்துக்குடி வடக்கு மாவட்டம் விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதியில் மீண்டும் போட்டியிடுவதற்கு அறிவிக்கப்பட்டு நேற்றைய தினம் விளாத்திகுளம் வருகை தந்த மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் வெற்றி வேட்பாளர் ஜீ.வி.மார்க்கண்டேயனுக்கு கழக நிர்வாகிகள் உற்சாக வரவேற்பளித்தனர். நிகழ்வில் விளாத்திகுளம் ஒன்றிய செயலாளர்கள் ராமசுப்பு, சின்னமாரிமுத்து, அன்புராஜன், இமானுவேல், புதூர் ராதாகிருஷ்ணன், செல்வராஜ், மும்மூர்த்தி, நவநீதகண்ணன் காசிவிஸ்வநாதன், உள்ளிட்ட கூட்டணி கட்சி நிர்வாகிகள்,திமுக நிர்வாகிகள், பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.